# உயிருக்கு போராடிய மூன்று பேருக்கு மியாட் மருத்துவமனையில் மறுவாழ்வு

சென்னை, நவ. 16–

கல்லீரலில் புற்றுநோய் கட்டியால் உயிருக்கு ஆபத்தான நிலையில் வந்த, மூன்று பேருக்கு, மியாட் மருத்துவமனை டாக்டர்கள், புற்றுநோய் கட்டியை அகற்றி, மறு வாழ்வு கொடுத்து உள்ளனர்.

விருத்தாசலத்தைச் சேர்ந்தவர் வெங்கடேசன், 40. கல்லீரலின் வலது புறத்தில் இருந்த பெரிய புற்றுநோய் கட்டியை அகற்ற, தனியார் மருத்துவமனை ஒன்றில் ஆபரேஷன் நடந்த நிலையில், ரத்தப்போக்கு அதிகமானது. 'காப்பாற்ற முடியாது' என, கைவிரித்ததாக கூறப்படுகிறது.

**நான்கு மணி நேரம்**

செயற்கை சுவாச உதவியுடன், சென்னை அருகே உள்ள மியாட் மருத்துவமனையில் அவரை சேர்த்தனர். ரத்த நாளங்களை துளைத்த நிலையில், 2.6 கிலோ கட்டி இருந்தது. சுரேந்திரன், பாரி, பார்த்திபன் தலைமையிலான டாக்டர்கள் குழு, நான்கு மணி நேரம் ஆபரேஷன் செய்து கட்டியை அகற்றி, அவரைக் காப்பாற்றியுள்ளது.

மேலும், இருவரின் மறுவாழ்வு குறித்து, டாக்டர்கள் பாரி, பார்த்திபனும் கூறியதாவது:

கோவையைச் சேர்ந்த வியாபாரி, ஆறுமுகம், 56. இதயத்திற்குச் செல்லும் முக்கிய ரத்த நாளத்தையொட்டி புற்றுநோய் கட்டி இருந்ததால் சிக்லான நிலை இருந்தது. 'ரேடியோ தெரபி' மூலம், கட்டியின் அளவைக் குறைத்து, பின், அதை அகற்றி, கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சை செய்தோம். அவர் நலமுடன் வீடு திரும்பியுள்ளார்.

மற்றொருவர் தலைமைச் செயலக ஊழியர் வெங்கடகிருஷ்ணன், 47. கல்லீரலில் உருவான புற்றுநோய் கட்டி, சிறுகுடல், பித்தப்பை, பெருங்குடல் மற்றும் வலது சிறுநீரகத்தின் ரத்த நாளங்களிலும் பரவியதால், 'ஆபரேஷன் செய்ய முடியாது' என, மருத்துவமனைகள் கைவிரித்தன.

இங்கு வந்த அவருக்கு, 'விப்பிள் செய்முறை'யில் சிகிச்சை அளித்தோம். முதலில் குடலை சுத்தம் செய்தோம். சிறுநீரகத்தை வெளியே எடுத்து, அதை பாதுகாப்பாக குளிரூட்டிய அறையில் வைத்தோம்.

**தலைசிறந்த செயல்பாடு**

பின், பாதிக்கப்பட்ட ரத்த நாளத்தை அகற்றிவிட்டு, மீண்டும் சிறுநீரகத்தை உள்ளே வைத்தோம். நான்கு மணி நேர ஆபரேஷனில், பிற பகுதிகளில் பரவியிருந்த கட்டியும் அகற்றப்பட்டது.

சிறுநீரக மாற்றம் செய்யாமலேயே வெற்றிகரமாக சிகிச்சை முடிந்தது.

இவ்வாறு, அவர்கள் கூறினர்.

இதுகுறித்து, மருத்துவமனை நிர்வாக இயக்குனர் மோகன்தாஸ் கூறுகையில், ''மருத்துவர்களின் தலைசிறந்த செயல்பாடும், நவீன தொழில்நுட்பங்களும், திறமையான துறை சார்ந்த குழுவும் தான் வெற்றிக்கு காரணம்,'' என்றார்.

துறைத்தலைவர் டாக்டர் சுரேந்தரன் கூறுகையில், ''சிக்கலான ஆபரேஷன் வெற்றிபெற, தனி டாக்டரால் முடியாது; பிற துறையினரின் ஒருங்கிணைப்பும், நவீன கட்டமைப்பும் தேவை. இது மியாட் மருத்துவமனையில் உள்ளது,'' என்றார்.

குணமடைந்த மூவரும், 'பல மருத்துவமனைகள் கைவிட்டன; இங்கு மறு வாழ்வு பெற்றோம். இவர்கள் டாக்டர்கள் அல்ல; உயிர் கொடுத்த கடவுள்' என்றனர்.




■ சென்னை, மணப்பாக்கம், மியாட் மருத்துவமனையில், கல்லீரல் பாதிக்கப்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் வந்த, மூன்று பேருக்கு சிகிச்சை அளித்த டாக்டர்களுடன், மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர், மோகன்தாஸ், தலைவர் மல்லிகா மோகன்தாஸ்.